# அதிரவைக்கும் மகளிர் போலீஸ்




**கோ**வை மாவட்டம், பொள்ளாச்சி தாலுக்காவில் சுமார் 5 லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் வாழ்ந்து வருகின்றனர். அடுத்துள்ள வால்பாறை வட்டத்தில் 1 லட்சத்திற்கும் அதிகமான மக்கள் உள்ளனர். பொள்ளாச்சியில் தென்னை விவசாயத்தை நம்பியுள்ள தலித் கூலித் தொழிலாளர்கள் 40 சதம் உள்ளனர். அதே போல 60 சதம் அதிகமாக பட்டியல் இனமக்கள் வல்பாறையில் தேயிலைத் தோட்டத் தொழிலை நம்பியுள்ளனர்.

இப்பகுதியில் ஆங்காங்கே காவல்நிலையங்கள் இருந்தாலும் பெண்களின் குறைத்தீர்க்கும் அரணாக மகளிர் காவல்நிலையம் பொள்ளாச்சியில் செயல்பட்டு வருகிறது. இந்தக் காவல்நிலையம் உண்மையில் பெண்களுக்குப் பாதுகாப்பாக இருக்கிறதா என்பதைப் பார்ப்போம்!

பெண்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ளும் இடமான பொள்ளாச்சி அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் ஆய்வாளர் சரஸ்வதி, இளம் ஆய்வாளர் பங்கஜம்தான் எல்லாம். இவர்களிடம் குடும்பத்தகராறு, வரதட்சணை கொடுமை, பெண்கள் கணவனால் கைவிடப்படுதல், விவாகரத்து எனப் பல பெண்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் கொண்டுவரப் படுகின்றன. ஆய்வாளர் சரஸ்வதி தலைமையில் பிரச்சினைகள் விசாரிக்கப்பட்டு புகார் பதிய ரூபாய் 500–ல் ஆரம்பிக்கும். கையூட்டுத்தொகை புகார் அளிப்பவரின் வசதியைப் பொறுத்து ரூபாய் 5000–ம் வரை கைமாற வேண்டும். இது மனுவுக்கு மட்டும்தான், எப்.ஐ.ஆர் போடுவது அரிதாகத்தான் நடக்குமாம்.

கட்டப்பஞ்சாயத்து பேசி முடிந்தவரை இருதரப்பினரிடையே பணம் கறக்கும் வரை கறந்து பிறகு பார்க்கலாம் என்று அனுப்பி விடுவார்களாம். பிரச்சினை, சிக்கல் என்றால் நல்லத் தொகையை வாங்கிக் கொண்டு முன்ஜாமீன் அல்லது தலைமறைவு அட்வைஸ் கொடுக்கப்பட்டு அனுப்பி விடுவதும் நடக்கிறதாம்.

இந்நிலையில் காவல்நிலைய வாசலில் கைக்குழந்தையுடன் துணிகள் கிழிந்த நிலையில் அழுதபடி இருந்த பெண்ணிடம் விசாரித்தோம். என்பேர் ராஜாமணிங்க; அப்பா பழனிச்சாமி; செட்டியக்கால் பாளையம் சொந்த ஊர். எங்க காலனியில் உள்ள நடைபாதையில் குழந்தைகள் விளையாடிக் கொண்டிருந்தனர்.


பெண்காவலருடன் ஆய்வாளர் சரஸ்வதி


போலீசாருடன் வாக்குவாதத்தில் துரை

அப்போது அங்கு வந்த பஞ்சலிங்கம், ராஜசேகர் இருவரும் புல் மப்பில் இருந்தனர்.

குழந்தைகள் விளையாடிய இடத்தில் பீர் பாட்டிலைப் போட்டு உடைத்தனர். இதை தட்டிக் கேட்ட என்னைத் திருட்டு முண்ட எங்கள கேள்வியா கேட்கிறஎன்று கேவலமாகப் பேசி அடித்துத் துணிகளைக் கிழித்தனர். அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் என்னை அவர்களிடமிருந்து மீட்டனர். அதன் பிறகு மகளிர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன். அவர்களும் என்னிடம் ரூ.450/– வாங்கிக் கொண்டு எங்கப் பகுதியில் ஆட்டோவில் வந்து விசாரித்தனர்.

மறுநாள் நான் என் தந்தை மற்றும் கணவருடன் வந்த போது பஞ்சலிங்கம், ராஜசேகரும் தி.மு.கவைச் சேர்ந்த துரையை அழைத்து வந்திருந்தனர். அவரும் கட்டப்பஞ்சாயத்துப் பேசினார். ஐயா நீங்க ஏன் இந்தப் பிரச்சினையில் தலையிடுறீங்க என்று கேட்ட என் தந்தையை, ஏண்டா சக்கிலி நாயே நீ எனக்குப் புத்தி சொல்றியா? உன்னைச் செருப்பாலே அடிப்பேன் என்று செருப்பைத் தூக்கி வீசினார். அங்கிருந்த அதிகாரிகள் வேடிக்கைப் பார்த்தார்களே தவிர யாரும் எதையும் கேட்கல. கட்டப்பஞ்சாயத்துப் பேசி என்னை அனுப்பிவிட்டனர் என்று புலம்பினார்.

கட்டப்பஞ்சாயத்துப் பேசும் காவல்துறை அதிகாரிகள், அரசியல்வாதிகள் மீது கடுமையான நடவடிக்கை எடுத்தால் மட்டுமே இது போன்ற கொடுமைகளைத் தடுக்க முடியும். தமிழக அரசு கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்குமா?

**மணிகண்டன்**